சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.121/2022

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரசம்மாள் | வயது | 70 |
| க/பெ | மாரப்பன் | வட்டம் | அவிநாசி |
| விலாசம் | சேவூர் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாய கூலி |

முதல் விசாரணை :

நான் இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி நான் எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை ஏற்றுக் கொள்ளும் படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. நான் கைரேகை தான் வைப்பேன். எனக்கு கையெழுத்து போட தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்திற்கான விபரத்தை எனது வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்து உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். அய்யாகுட்டி என்பவர் என்னுடைய தாத்தா என்றால் சரி தான். அய்யா குட்டிக்கு 3 மகன்கள் என்றால் எனது அப்பா மட்டுமே மூத்த தாரத்து ஒரே மகன் ஆவார். இளைய தாரத்து மகன்கள் தான் சின்ன மாரன் மற்றும் சுப்பன் என்றால் சரி தான். அய்யாகுட்டிக்கு 5 ஏக்கர் 88 சென்ட் விவசாய நிலம் இருந்தது என்றால் சரி தான். அந்த பூமி மேட்டுப்பாளையம் வட்டம், பள்ளேபாளையம் கிராமம், புல எண்.225/1 ல் உள்ளது என்றால் எனக்கு புல எண் தெரியாது. மூத்ததாரம் சின்னம்மாள் என்ற எனது பாட்டி என்று ஒருவர் இருந்தார் என்பதை காட்டவும் அவர் அய்யாகுட்டியை திருமணம் செய்தார் என்று

காட்டவும் ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி யல்ல. நான் பிறப்பதற்கு முன்னரே சின்னம்மாள் மற்றும் அய்யாகுட்டி இறந்து விட்டார்கள் என்றால் நான் பிறந்த பின்னர் தான் இறந்தார்கள். அய்யாகுட்டி மற்றும் சின்னம்மாளின் இறப்பு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி தான். அய்யாகுட்டியின் மனைவி மாராள்என்றால் சரி யல்ல. அவரது மனைவி பெயர் சின்னம்மாள். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் அய்யா குட்டி ராமாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்று கூறி உள்ளேன் என்றால் சரி தான். ராமாளுக்கு சின்ன மாரான் மற்றும் சுப்பன் என இரண்டு மகன்கள் என்றால் சரி தான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே வாதிகள் எங்கள் மீது இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.174/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து இருந்தார்கள் என்றால் சரி யல்ல. வாதிகளும் தங்களது பிராதில் பழைய வழக்கினை பற்றி குறிப்பிட்டு உள்ளார்கள் என்றால் சரி யல்ல. புல எண்.225/1 ல் உள்ள மொத்தம் 5 ஏக்கர் 88 செண்ட்டில் 1 ஏக்கர் 96 செண்ட்ஐ நான் ஏற்கனவே விற்று விட்டேன் என்றால் நாங்கள் விற்க வில்லை இளையகுடி மக்கள் சின்ன மாரன் மற்றும் சுப்பன் அவர்களது பாகத்தை பிரித்து கொண்டார்கள். நானும், குப்பம்மாள், தங்கவேல் மற்றும் கந்தன் ஆகியோர்கள் மாராத்தாள் என்பவருக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் இல்லை. பங்கு பிரித்து கொண்டார்கள். வா.சா.ஆ 3 ன் மூலமாக ராமாள், ராமன் மக்கள் கந்தன், தங்கவேல் மகள்கள் குப்பம்மாள் மற்றும் நான் ஆகியோர்கள் மாராத்தாள் என்பவருக்கு கிரையம் கொடுத்து உள்ளோம் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ல் ராமாள் அய்யாகுட்டியின் மனைவி என குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சின்ன மனைவி என்று குறிப்பிட்டு இருப்பேன். ராமாளின் வாரிசுகளான ராமன், சின்ன மாரன் மற்றும் சுப்பன் என காட்டி உள்ளேன் என்றால் ராமன் என்பவர் ராமாளின் மகன் அல்ல அவர் சின்னம்மாளின் வாரிசு ஆவார். பி.வா.சா.ஆ.2 ல் சின்னம்மாளின் மகன் என குறிப்பிடாமல் ராமாளின் மகன் என்று தான் குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரி யல்ல. வா.சா.ஆ..3 ல் அய்யாகுட்டியின் மனைவி ராமாள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அய்யாகுட்டியின் இளைய மனைவி என்று குறிப்பிடப்படவில்லை

என்றால் சரி யல்ல. சுப்பன் எங்கு வசித்து வந்தார் என்றால் மேட்டுப்பாளையத்தில் உள்ள சீரங்கராயன் ஓடை பகுதியில் வசித்து வந்தார். சின்னம்மாளின் வாரிசுகள் எங்கு வசித்து வந்தார்கள் என்றால் அவர்களும் அந்த சீரங்கராயன் ஓடை பகுதியில் தான் வசித்து வந்தார்கள். நான் சேவூரிலும், என் அக்கா குப்பம்மாள் கொசத்தெரு, வெள்ளிப்பாளையத்திலும், கந்தசாமி கரட்டு மேட்டிலும் வசித்து வருகிறோம். சுப்பனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரி தான். சுப்பன் எந்த வயதில் இறந்தார் என்றால் 50-55 வயதுக்கு மேல் இருக்கும். சுப்பன் திருமணம் ஆகாமல் சீரங்கராயன் ஓடை பகுதியில் வசித்து வந்த போது குப்பம்மாள் வீட்டில் தான் குடியிருந்து சாப்பிட்டு வந்தார் என்றால் சரி தான். அவர் இறக்கும் வரை குப்பம்மாள் வீட்டில் தான் வசித்து வந்தார் என்றால் சரி தான். எங்களுக்கும் சின்ன மாரனின் வாரிசுகளுக்கும் எந்த போக்கு வரத்தும் இருந்தது இல்லை. நாங்கள் யாரும் அவர்கள் வீட்டிற்கு போகவோ அவர்கள் யாரும் எங்கள் வீட்டிற்கு வரவோ மாட்டார்கள். சுப்பன் எந்த காலத்தில் இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. அவருடைய உயிர் பாதி பிரிய போகும் நேரத்தில் வெள்ளியங்கிரி கைநாட்டு வாங்கி விட்டார். சுப்பன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு மருத்துவ ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி தான். சுப்பன் எழுதி கொடுத்த உயில் ஆவணத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. 5-வது வாதி என்னிடம் சுப்பன் தனக்கு உயில் எழுதி வைத்துள்ளதாகவும் ஆகவே பூமியில் தனக்கும் பங்கு இருப்பதாக என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் போடவில்லை. அவ்வாறு எவ்வளவு வருடங்களுக்கு முனனர் கேட்டார் என்றால் சுப்பன் இறந்து ஒரு மாதம் கழித்து கேட்டார். சுப்பனின் கையெழுத்தை வெள்ளிங்கிரி பொய்யாக போட்டு உள்ளார் என எங்காவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அன்றைய தேதியில் இருந்து இது வரை வெள்ளிங்கிரியிடம் சுப்பன் எழுதி கொடுத்த உயிலின் நகலை கொடுக்க வேண்டும் என அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வாய்மொழியாக கேட்டேன். அவர் தர மறுத்து விட்டார். வழக்கறிஞர் மூலமாக உயில் ஆவணத்தை பொறுத்து எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சொத்து எங்கே

போயிடும் என்ற நம்பிக்கையில் நடவடிக்கை எடுக்க வில்லை. பி.வா.சா.ஆ.6 ல் அய்யாக்குட்டியின் மக்கள் ராமன், சின்னம்மாள், மைனர் சுப்பன் என்று தான் குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரி தான். பி. வா.சா.ஆ..6 ல் சின்னமாரன் என்பதற்கு பதிலாக சின்னம்மாள் என்று பதிவு செய்ததால் அதனை சரி செய்ய மேட்டுப்பாளையம் வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்து சின்னம்மாள் என்ற பெயரை நீக்கி விட்டு சின்ன மாரன் என்று பதிவு செய்ய ப்பட்டது என்றும் அதற்கான உத்தரவு தான் வா.சா.ஆ.18 என்றால் சரி யல்ல. வா.சா.ஆ.18 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் ராமன், சுப்பன் மற்றும் சின்ன மாரன் ஆகியோர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றும் அவ்வாறான பட்டா தான் வா.சா.ஆ..19 என்றால் சரி யல்ல. அய்யாகுட்டியின் வாரிசுகளான ராமன், சின்ன மாரன் மற்றும் சுப்பன் ஆகியோர்களுக்கு 5 ஏக்கர் 88 செண்டில் தலா 1 ஏக்கர் 96 செண்ட் பாத்தியம் என்றால் இளையகுடி மக்கள் சின்னமாரன் மற்றும் சுப்பன் ஆகியோர்கள் சேர்ந்து 1 ஏக்கர் 96 செண்ட் எடுத்து கொண்டார்கள். சின்னமாரனுக்கு பாத்தியப்பட்ட பூமியை யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் எல்லோரும் பொதுவில் அனுபவித்து வந்தோம். சுப்பனின் பூமியை யார் அனுபவித்து வந்தது என்றால் மூத்த குடி மக்கள் ஆகிய நாங்களும் இளைய குடி மக்களும் அனுபவித்து வந்தோம். சின்னமாரனுக்கு எவ்வளவு பூமி பாத்தியம் என்றால் ஏக்கர் கணக்கு எனக்கு தெரியாது. சுப்பனுக்கு எவ்வளவு பூமி பாத்தியம் என்றால் மொத்தம் உள்ள 5 ஏக்கர் 88 செண்ட்டில் சுப்பன் இருக்கும் போது பிரிக்காததால் பொதுவில் தான் அனுபவித்து வந்தோம். வா.சா.ஆ 3 ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுக்கப் பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாததால் அது பற்றி தெரியாது. நானும் கேட்டு தெரிந்து கொள்ள வில்லை. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்திலேயே செக்கு பந்திகள் குறிப்பிடப் பட்டு உள்ளது என்றால் சரி யல்ல. வா.சா.ஆ 3 ல் செக்கு பந்தியாக சுப்பன் பூமிக்கும் தெற்கு, சின்னமாரன் பூமிக்கும் கிழக்கு என செக்கு பந்தி குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரி யல்ல. சுப்பன், சின்ன மாரன் இறந்ததற்கு பின்னர் அவரது நிலத்தை யார் அனுபவித்து வந்தது என்றால் எனது தம்பி

கந்தசாமி ஒரு பாதியையும் 5-ம் வாதியின் அக்கா மணியாள் ஒரு பாதியையும் அனுபவித்து வந்தார்கள். தற்போது வரை அ.வ.எண்.174/2016 என்ற வழக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எங்களுக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கை நாங்கள் விற்று விட்டோம் என்றும் மீதமுள்ள 2/3 பங்கை வில்லங்கம் செய்யக் கூடாது என்று தான் இந்த வழக்கின் வாதிகள் இந்த வழக்கில் தீர்ப்பு பெற்று உள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 26.05.2022 அன்று நானும், கந்தசாமி, நடராஜ், பாலுச்சாமி மற்றும் இந்திராணி ஆகியோர்கள் சேர்ந்து 2 ஏக்கர் 89-1/2 செண்ட்ஜ விற்று விட்டோம் என்றால் சரி தான். அ.வ.எண்.174/2016 என்ற வழக்கு அந்த வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப் பட்ட விபரம் தெரிய வந்ததும் அவசர அவசரமாக விற்பனை செய்து விட்டோம் என்றால் சரி யல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரி தான். 26.05.2022 தேதிய வா.சா.ஆ.25 ஆவணத்தில் அதில் உள்ள சொத்துக்கள் எங்களுக்கு பட்டாப் படி பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு உள்ளோம் என்றால் சரி யல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ளது எனது சித்தப்பாவின் கையெழுத்து என்றால் எனக்கு படிக்க தெரியாது. சுப்பன் அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 96 செண்ட் ஐ தான் வெள்ளிங்கிரிக்கு எழுதி கொடுத்து உள்ளார் என்றால் சரி யல்ல. சுப்பன் வெள்ளிங்கிரிக்கு உயில் எழுதி கொடுத்த விபரம் எல்லோருக்கும் தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. அ.வ.எண்.174/2016 வழக்கில் உயிலை பொறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு உயில் உண்மை என தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் சரி யல்ல. அந்த வழக்கில் நானும் எனது அண்ணன் கந்தசாமியும் ஒரு தரப்பினர் என்பதால் அந்த வழக்கின் தீர்ப்பு எங்களை கட்டுப் படுத்தும் என்றால் சரி யல்ல. அ.வ.எண்.174/2016 வழக்கின் தீர்ப்பு செல்லாது என்றும் எங்களை கட்டுப்படுத்தாது என்றும் இதுவரை நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரி யல்ல. அ.வ.எண.174/2016 வழக்கின் சொத்துக்களை விற்பனை செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கப் பட்ட பின்னர் நாங்கள் எழுதி கொடுத்த வா.சா. 25 ஆவணம் சட்டப் படி செல்லாது

என்றால் சரி யல்ல. அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு பற்றிய விபரம் எங்களுக்கு நன்கு தெரிந்தும் அந்த ஆவணத்தை எழுதி கொடுத்து உள்ளதால் அந்த ஆவணம் செல்லாது என்றும் அது வாதிகளை கட்டுப் படுத்தாது என்றால் சரி யல்ல. அய்யாகுட்டிக்கு சின்னம்மாள் என்ற மனைவியே இல்லை என்றால் சரி யல்ல. அய்யாகுட்டிக்கு மாராள் என்ற ஒரே மனைவி மட்டுமே இருந்தார் என்றால் சரி யல்ல. அய்யாகுட்டிக்கும் ராமாளுக்கும் பிறந்தவர்கள் தான் ராமன், சுப்பன் மற்றும் சின்னமாரன் என்றால் சரி யல்ல. அந்த 3 பேருக்கும் அய்யாகுட்டி இறந்த பின்னர் அவர்கள் சொத்துக்களில் சம்பங்கு உண்டு என்றால் சரி யல்ல. சுப்பன் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து வெள்ளிங்கிரி பெயருக்கு ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்து விட்டார் என்றும் அந்த உயில் ஆவணத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரி யல்ல. 5 ம் வாதி வெள்ளிங்கிரிக்கு சுப்பனின் சொத்து உயில் படி பாத்தியம் என்றால் சரி யல்ல. மற்ற வாதிகள் அனைவருக்கும் சின்ன மாரனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் அவர்களுக்கும் பாத்தியம் உள்ளது என்றும் ஆகவே வாதிகள் கோரிய வாறு பரிகாரம் பெற உரிமை உடையவர்கள் என்றால் சரி யல்ல.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.